## சுருக்கம்

**பணியமைப்பு - கருவூலக் கணக்குத் துறை - திரு.ரா.சதாசிவம், இளநிலை உதவியாளர், மாவட்ட கருவூலம், தூத்துக்குடி மாவட்டக் கருவூல அலகு - கருணை அடிப்படையில் 11.01.2021 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்டது - பணிவரன்முறை செய்தல் - ஆணை - வெளியிடப்படுகிறது.**

---

நிதி(கருவூலக்கணக்கு-2)த் துறை

அரசாணை (3ப) எண்.04

நாள்: 21.02.2024,
சோபகிருது, மாசி-9,
**திருவள்ளுவர் ஆண்டு : 2055**

**படிக்கப்பட்டது:**

1. அரசாணை (நிலை) எண்.18, தொ.(ம).வே.வா.(க்யூ1)த் துறை, நாள் 23.01.2020.
2. தூத்துக்குடி மாவட்ட கருவூல அலுவலர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.8075/2019/அ2, நாள்.05.01.2020.
3. அரசு கடித எண்.7029/நிதி(க.க.2)/2023, நாள்.06.07.2023, 12.01.2024 மற்றும் 30.01.2024.
4. கருவூல கணக்கு ஆணையரின் கடித ந.க.எண். 39878/2022/சி2, நாள்.25.01.2023, 13.10.2023 மற்றும் 02.02.2024.

**ஆணை:**

மேலே நான்கவதாகப் படிக்கப்பட்ட கருவூலக் கணக்கு ஆணையரின் கடிதத்தில், தூத்துக்குடி மாவட்டக் கருவூல அலகில் உதவியாளராக பணிபுரிந்த திருமதி.அ. விஜயலட்சுமி என்பவர் 10.05.2017 அன்று பணியிலிருக்கும் போது பணியிடை மரணமடைந்ததைத் தொடர்ந்து, அவரது வாரிசுதாரர் மற்றும் மகனுமான திரு.ரா.சதாசிவம் என்பவர் கருணை அடிப்படையில் கருவூலம் மற்றும் கணக்குத் துறையில் தூத்துக்குடி மாவட்டக் கருவூல அலகில் பணியமர்த்தப்பட்டு, 11.01.2021 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வருகிறார் என்றும், இடைநிலைக் கல்வி பள்ளி இறுதி வகுப்பில் பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், பணியேற்பு செய்த நாளில் அரசாக் நிர்ணயிக்கப்பட்ட வயதினை நிறைவு செய்துள்ளார் என்றும், இறந்த அரசு ஊழியரின் குடும்பம் வறிய நிலையில் உள்ளது என்றும், தனியரின் குடும்பத்தில் எவரும் அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் பணிபுரியவில்லை என்பதற்கான சான்றிதழினை அளித்துள்ளார் என்றும், தமிழ்நாடு அமைச்சுப்பணியில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் பெறுவதற்கான தகுதியை தனியர் பெற்றுள்ளார் என்றும், தெரிவித்து அவரது பணியினை 11.01.2021 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் வரன்முறை செய்து ஆணை வழங்குமாறு அரசினைக் கோரியுள்ளார்.

தமியா

2. மேலே, இரண்டாவதாகப் படிக்கப்பட்ட செயல் முறை ஆணையில் திரு.ரா.சதாசிவம் (காலஞ்சென்ற திருமதி.அ. விஜயலட்சுமி, உதவியாளர் என்பவரின் வாரிசுதாரர் மற்றும் மகன்) என்பவர் கருணை அடிப்படையில், தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016-ல் பிரிவு 17-ன் உட்பிரிவு (1)-ன்படி தற்காலிகமாக இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்டார். மேலும் அச்செயல்முறை ஆணையின்படி தனியர், மாவட்ட கருவூலம், தூத்துக்குடி மாவட்டக் கருவூல அலகில் இளநிலை உதவியாளராக 11.01.2021 முற்பகல் முதல் தற்காலிகமாக பணிபுரிந்து வருகிறார். அவரது பணியினை 11.01.2021 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் வரன்முறை செய்து ஆணை வழங்குமாறு அரசினைக் கோரியுள்ளார்.

3. கருவூலக் கணக்கு ஆணையரின் கருத்துருவினை உரிய ஆவணங்களுடன் அரசு கவனமுடன் பரிசீலித்து, இளநிலை உதவியாளர் பணியிடத்தில் ஓராண்டிற்கு மேலாகப் பணிபுரிந்து வரும் திரு.ரா.சதாசிவம் என்பவரின் தற்காலிகப் பணிநியமனமானது, இளநிலை உதவியாளர் பதவியில் திருப்தி அளிக்கும் படியாக உள்ளதாலும், கருணை அடிப்படையிலான நியமனத்திற்குரிய அனைத்துத் தகுதிகளையும் தனியர் நிறைவு செய்துள்ளதாலும், திரு.ரா.சதாசிவம், இளநிலை உதவியாளர் என்பவரின் பணியினை தனியர் பணியேற்ற நாளான 11.01.2021 முற்பகல் முதல் அவர் அப்பதவிக்குரிய உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைகுட்பட்டு வரன்முறைப்படுத்தி அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால் ஆண்டு ஊதிய உயர்வு / ஊதிய நிலுவைத் தொகை ஏதுமிருப்பின் தனியர் அவற்றினைப் பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார். மேலும் தனியர் பொருட்டு தமிழ்நாடு கருவூலக் கணக்குத் துறை பணிவிதிகளின்படி அன்னாருக்கு தகுதிகாண்பருவம் துவங்குதல் மற்றும் வரையறுக்கப்பட்ட தேர்வுகள் மற்றும் பயிற்சிகள் ஏதும் இருப்பின் அது குறித்து தக்க செயல்முறை ஆணை கருவூலக் கணக்கு ஆணையரால் வெளியிடப்பட வேண்டும் எனவும் ஆணையிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

த. உதயச்சந்திரன்,
அரசு முதன்மைச் செயலாளர்

<u>பெறுநர்</u>

திரு.ரா.சதாசிவம், இளநிலை உதவியாளர், மாவட்டக் கருவூலம், தூத்துக்குடி மாவட்டம்.
(பணிப்பதிவேடு மற்றும் அனைத்து மூலச்சான்றிதழ்கள்) (துறைத் தலைவர் வழியாக)

கருவூலக் கணக்கு ஆணையர், சென்னை - 35.

மாவட்ட கருவூல அலுவலர், தூத்துக்குடி மாவட்டம்.

மண்டல இணை இயக்குநர், திருநெல்வேலி மாவட்டம்.

<u>நகல்</u>

இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி / அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்